நாள் 08.06.2026

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண் 6/2026

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரித்ரகுமான் | | |
| த/பெ | மொய்தீன் | | |
| கிராமம் | திருவெண்ணெய்நல்லூர் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் மேலமங்களம் |
| தாலுக்கா | திருவெண்யென்நல்லூர் | வயது | 43 /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 08.06.2026 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

(1) நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் மேலமங்களம் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 23.06.2021 தேதி திருவெண்ணெய்நல்லூர் (வடக்கு) கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு காலை சுமார் 10 மணியளவில் விஷால் என்பவரை கடத்தி தாக்கி கொலை முயற்சி செய்த வழக்கில் சில எதிரிகளை பிடித்து வைத்துள்ளதாவும் அவர்கள் வாக்குமூலம் கொடுக்க தயாராக உள்ளதாகவும் நீங்கள் அதில் சாட்சியாக இருக்க வேண்டும் என்று எங்களை கேட்டுக்கொண்டார்.

(2) பின்பு நானும் என் உதவியாளர் புஷ்பராஜன் அவர்கள் இருந்த இடமான திருவெண்ணெய்நல்லூர் கள்ளுக்கடை அருகே சென்றோம். அங்கு ஆய்வாளர் அவர்கள் எதிரி மிதுன் (எ) மிதுன்ராஜ், கணேஷ் த-பெ பக்கிரிசாமி மற்றும் த-பெ கோவிந்தராஜ் மற்றும் அருண்குமார் (இளம்சிறார்) த-பெ ஏழுமலை ஆகியோர்களை எங்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்து அதில் மிதுன்(எ)மிதுன்ராஜ் தன்னிச்சையாக எந்த வற்புறுத்தலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதில்

என்னிடமும், என்னுடைய உதவியாளிடமும் கையொப்பம் பெற்றார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவம் குறித்தும் தன்னை அழைத்து சென்றால் சம்பத்திற்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் சம்பவத்தில் பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்திருந்த இடத்தினை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார்.

(3) ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அதில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ 3 ஆகும்.** பின்பு எதிரிகள் ஆய்வாளர் மற்றும் எங்களுடன் விழுப்புரம் கிழக்குமுனை ரோட்டில் உள்ள கோவிந்தராஜ் வீட்டின் அருகில் சுமார் 12.45 மணிக்கு எதிரி மிதுன்(எ)மிதுன்ராஜ் அடையாளம் காட்டிய PY 05 E 2507 எண்ணுள்ள பலினோ காரை -1, TN 33 BP 2446 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனமும், சுமார் 2 அடி நீளமுள்ள சவுக்கு தடி-1, 2 அடி நீளமுள்ள இரும்பு பைப்-1 ஆகியவைகளை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிக்-கொண்டார்கள். அதில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.

(4) அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசாஆ 4 ஆகும்.** அந்த கார் மற்றும் ஆயுதங்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி அந்த காரின் புகைப்படத்தை பார்த்து அடையாளம் காட்டினார். அந்த புகைப்படத்தில் (எண்ணிக்கை-2) உள்ள கார் **சா.பொ-1 ஆகும். தடி சா.பொ-2 ஆகும், இரும்பு பைப்பு சா.பொ.-3 ஆகும்.** அதன் பிறகு ஆய்வாளர் அவர்கள் எதிரி வழக்கு சொத்து சகிதம் காவல் நிலையம் புறப்பட்டார்கள். ஆய்வாளர் அவர்கள் என்னையும், என் உதவியாளரையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார்கள். TN 33 BP 2446 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை ஆய்வாளர் புகார் தாரரிடம் ஒப்படைத்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(5) எனக்கு எழுத்து மூலமான வேண்டுகோளை ஆய்வாளர் கொடுத்தாரா என்றால் இல்லை. திருவெண்ணெய்நல்லூர் காவல் ஆய்வாளருடன் நான் எத்தனை மணி நேரம் இருந்தேன் என்றால் 4 மணி நேரம் இருந்தேன். அலுவலகத்தில் இருந்து வெளியே செல்லும்போது நான் தாசில்தாரர் இடம் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் அலுவலகத்தில் இருந்து வேறு எல்லைக்கு வெளியே செல்லும்போது எழுத்து பூர்வமான தகவல்

கொடுத்தேனா என்றால் இல்லை. கிராம நிர்வாக மேனுவல் உள்ளது என்றால் சரிதான். அதில் நான் தினம் காலையில் செல்லும்போது எங்கு செல்கிறேன் என்று எழுதி கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பதிவேட்டில் நான் எழுதவில்லை என்றால் இல்லை.

(6) தற்போது கள்ளுக்கடையில் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லுவதற்கு முன்பே ஆய்வாளர் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை யார் டைப் செய்தார்கள் எ ன்றால் காவலர் ஒருவரை வைத்து தட்டச்சு செய்தார்கள். ஆய்வாளர் சொல்ல சொல்ல சொல்ல காவலர் தட்டச்சு செய்தார் என்றால் சரிதான். தட்டச்சு செய்வதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு மணி நேரம் ஆனது. அதன் பின்னிட்டுதான் நான் விழுப்புரம் கிளம்பு சென்றேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் தட்டச்சு செய்த காவலர் பெயர் குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த இடத்தில் வழக்கு சொத்துக்கள் மறைத்து வைத்திருப்பதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. கோவிந்தராஜ் வீடு அருகே என்று உள்ளது என்றும் , எந்த இடம் , எந்த தெரு என்று கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். விழுப்புரம் சென்று வந்த பிறகு தாசில்தாரிடம் எழுத்துமூலமாக தன் வழக்கு சம்மந்தமாக சென்றதை பற்றி தகவல் சொன்னேனா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் மிதுன் மற்றும் வேறு நபர்களையும் பார்க்கவில்லை என்றும், அவர் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அவர் எந்த பொருளும் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-K.Sujatha
Additional District Judge,
(FTC) Villupuram.